# குழந்தைகள் பாதுகாப்பு குறித்த கல்வி

## பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான தகவல்கள்

| | |
|---|---|
| பாடசாலையின் பெயர்<br>Name of school | |
| பங்குபற்றும் வகுப்பு(கள்)<br>Participating Year/s | |
| ஒரு வாரத்திற்கான பாடங்களின் எண்ணிக்கை<br>Number of lessons per week | |
| பாடசாலைத் தொடர்பு நபர்<br>School contact person | |
| தொடர்புத் தொலைபேசி இலக்கம்<br>Contact telephone number | |

அன்புடைய பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு

இந்த ஆண்டு, மேலே சொல்லப்பட்டுள்ள ஆண்டுகளுக்கான வகுப்புகளில் பயிலும் மாணவ-மாணவியர்கள் கட்டாயப் பாடமான 'ஆளுமை வளர்ச்சி, சுகாதாரம் மற்றும் உடற்பயிற்சிக் கல்வி' (Personal Development, Health and Physical Education (PDHPE)) -யில் ஈடுபாடு கொள்வார்கள்.

எமது பாடசாலையின் - PDHPE திட்டத்தில் கட்டாயப் பாடமான 'குழந்தைப் பாதுகாப்பு குறித்த கல்வி' உள்ளடங்கும். 'குழந்தைப் பாதுகாப்பு குறித்த கல்வி'-யில் போதிக்கப்படும் சில பாடங்கள் உணர்வுபூர்வமான சில விடயங்களைப் பற்றியதாகும். மாணவ-மாணவியரது வயதிற்கேற்ற முறையில் பாடசாலை இந்தப் பாடங்களைப் போதிக்கும்.

'குழந்தைப் பாதுகாப்பு குறித்த கல்வி'-யில் போதிக்கப்படும் இந்தக் குறிப்பிட்ட உள்ளடக்கங்கள் அடுத்த பக்கத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது.

'குழந்தைப் பாதுகாப்பு குறித்த கல்வி'-யைப் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு 'கல்வித் திணைக்கள'த்தின் PDHPE வலைத்தலத்தில் உள்ள Child protection and respectful relationships education ('குழந்தைப் பாதுகாப்பு மற்றும் கண்ணியமான உறவுமுறைகள் கல்வி') எனும் பகுதிக்குச் செல்லுங்கள்.

இந்தப் 'பருவ'த்தில் ஒரு வாரத்திற்குப் போதிக்கப்படும் 'குழந்தைப் பாதுகாப்பு குறித்த கல்வி' பாடங்களின் எண்ணிக்கை மேலே சொல்லப்பட்டுள்ளது.

உங்களுக்கு மேலதிகத் தகவல்கள் தேவைப்பட்டால், மேலே சொல்லப்பட்டுள்ள இலக்கத்தில் பாடசாலைத் தொடர்பு நபருடன் தொடர்புகொள்ளுங்கள்.

## 'தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை'

பாடசாலையுடன் தொடர்புகொள்வதில் உங்களுக்கு உதவ மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் உங்களுக்குத் தேவைப்பட்டால், 13 14 50 -இல் 'தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை'-யுடன் தொடர்புகொண்டு உங்கள் மொழியில் மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் தேவை என்று கேளுங்கள். தொலைபேசி இயக்குனர் பாடசாலையை அழைத்து, உரையாடலில் உங்களுக்கு உதவ மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரை இணைப்பிற்குக் கொண்டுவருவார். இந்த சேவைக்காக உங்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படமாட்டாது.

உங்கள் உண்மையுள்ள

பாடசாலை அதிபர் (Principal)

‘குழந்தைப் பாதுகாப்பு குறித்த கல்வி’யில் போதிக்கப்படும் பாடங்களில் உள்ளடங்குவன:

The content which will be covered in child protection education includes:

(Staff to tick the relevant boxes below for Stage 5 content.)

- ☐ ஒருவரது சுய அடையாளம் குறித்த சமூக-மரபுகள், படிவார்ப்புகள் (stereotypes) மற்றும் எதிர்பார்ப்புகள்
  Norms, stereotypes and expectations in relation to identity
- ☐ பன்முகத் தன்மை மற்றும் ஒற்றுமைத்தன்மையை மதித்தல்
  Valuing diversity and inclusivity
- ☐ சமமான மற்றும் கண்ணியமான தொடர்புறவுகளை வளர்த்துக்கொள்ளல்
  Developing equal and respectful relationships
- ☐ நடத்தைகளும், சூழ்நிலைகளும் பாதுகாப்பானவையா அல்லது பாதுகாப்பற்றவையா என்று மதிப்பிடல்
  Assessing behaviours and situations as safe or unsafe
- ☐ தொடர்புறவுகளில் காணப்படும் நேர்முக மற்றும் எதிர்முக அதிகாரம்
  Positive and negative power in relationships
- ☐ துஷ்ப்பிரயோகம் மற்றும் புறக்கணிப்பு
  Abuse and neglect
- ☐ துஷ்ப்பிரயோக சூழ் நிலைகளை அடையாளம் காணலும் அவற்றை எதிர்கொள்ளலும்
  Recognising and responding to abusive situations
- ☐ பாலினம் மற்றும் வன்முறை
  Gender and violence
- ☐ பாகுபாடு, தொல்லைப்படுத்தல் மற்றும் வசைபாடல்
  Discrimination, harassment and villification
- ☐ தொடர்புறவுகளில் பாதுகாப்பற்ற, துஷ்ப்பிரயோக மற்றும் வன்முறைத்தனமான சூழ்நிலைகளைச் சமாளிப்பதற்கான யுக்திகள்
  Strategies to manage unsafe, abusive and violent situations in relationships
- ☐ தொடர்பாடல் கொள்ளல், மற்றவர்களோடு தொடர்பில் இருத்தல் மற்றும் உதவி நாடல்
  Communication, connections and asking for help
- ☐ பால்ரீதித் தெரிவுகள் மற்றும் சம்மதத் தெரிவிப்பின் முக்கியத்துவம்
  Sexual choices and the importance of consent
- ☐ அறிவுரை மற்றும் ஆதரவுதவித் தொடர்புகள் மற்றும் சேவைகளைப் பெறல்
  Accessing networks and services for advice and support